இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

---

# 1984 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, இலங்கை கணனி மற்றும் தகவல் தொழினுட்பப் பேரவைச் சட்டம்

---

*(1984 மார்ச் மாதம் 29 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

*1984 மார்ச் மாதம் 30 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: ரூபா 1.50 தபாற் செலவு: சதம் 90

# 1984 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, இலங்கை கணனி மற்றும் தகவல் தொழினுட்பப் பேரவைச் சட்டம்

[1984, மார்ச்சு மாதம் 29 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ.—ஓ 24/83
1586

**இலங்கை கணனி மற்றும் தகவல் தொழினுட்பப் பேரவையைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.**

**1.** இச்சட்டம் 1984 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, இலங்கை கணனி மற்றும் தகவல் தொழினுட்பப் பேரவைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். (இதனைத்துப்பின்னர் இத்தேதி " நியமிக்கப்பட்ட தேதி " எனக் குறிப்பீடு செய்யப்படும்).

## பாகம் I

## இலங்கை கணனி மற்றும் தகவல் தொழினுட்பப் பேரவையைத் தாபித்தல்

**இலங்கை கணனி மற்றும் தகவல் தொழினுட்பப் பேரவையைத் தாபித்தல்.**

**2.** இலங்கை கணனி மற்றும் தகவல் தொழினுட்பப் பேரவை என அழைக்கப்படவேண்டிய பேரவை ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும். அது இதனைத்துப்பின்னர் " பேரவை " எனக் குறிப்பீடுசெய்யப்படும். அத்துடன் 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அப்போதைக்குப் பேரவை உறுப்பினர்களாக இருக்கும் ஆட்களை அது கொண்டிருத்தல் வேண்டும்.

**பேரவை கூட்டிணைக்கப்பட்ட குழுவாதல்.**

**3.** பேரவையானது 2 ஆம் பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரினால் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும். அத்துடன் அது இடையறு வழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் கொண்டதாதல் வேண்டும்; அத்துடன் அத்தகைய பெயரில் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம்.

**பேரவையின் உறுப்பினர்கள்.**

**4.** (1) பேரவையானது கணனி மற்றும் தகவல் தொழினுட்பம், பொருளாதாரம், நிதித்துறை, கல்வி, பொறியியல், அறிவியல் அல்லது தொழினுட்பம் ஆகிய துறைகளில் அனுபவம் வாய்ந்தவர்களென அல்லது அவற்றோடு தொடர்புபட்ட கருமங்களில் திறமை காட்டியுள்ளவர்களென சனாதிபதிக்குத் தோன்றும் ஆட்களிலிருந்து சனாதிபதியினால் நியமிக்கப்படவேண்டிய பத்து உறுப்பினர்களுக்கு மேற்படாதோரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) சனாதிபதி பேரவை உறுப்பினர்களுள் ஒருவரை பேரவையின் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

2—ஏ 075122—2,625 (02/84)

(3) பேரவை உறுப்பினர்களின் பதவிக்காலம், பேரவை உறுப்பினர்களுக்குக் கொடுபடற்பாலதான ஊதியம், பேரவையின் கூட்டங்கள் மற்றும் இலச்சினை என்பன தொடர்பாக இச்சட்டத்துக்கான அட்டவணையின் ஏற்பாடுகள் பயனுடையனவாதல் வேண்டும்.

பேரவையின் பணிகளும் கடமைகளும்

5. பின்வருவன பேரவையின் பணிகளும் கடமைகளும் ஆதல் வேண்டும் :—

(அ) பின்வருவனவற்றின்மீது அமைச்சருக்கு ஆலோசனை அளித்தல் :—

(i) கணனிகள் மற்றும் தகவல் தொழினுட்பத்தின் மீது தேசிய கொள்கையொன்றை உருவாக்கலும் நடைமுறைப்படுத்தலும் ;

(ii) இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தை சீர்திருத்தும் கருத்துடனும் தொழினுட்பத்துறை மாற்றத்தின் போட்டாபோட்டியைச் சமாளிக்கும் வகையில் அவசியமான திறமையை இலங்கை பெற்றுக்கொள்ள இயலச்செய்யும் கருத்துடனும் இலங்கையில் கணனிகள் மற்றும் தகவல் தொழினுட்பத்தின் பயன்பாட்டையும் பிரயோகத்தையும் ஊக்குவிப்பதற்கும், இயலச் செய்வதற்கும் உதவியளிப்பதற்குமான வழிவகைகள் ;

(iii) இலங்கைக்கு கணனிகளையும் தகவல் தொழினுட்பத்தையும் அறிமுகப்படுத்துவதற்கு அவசியமான கட்டுக்கோப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் மேம்படுத்துவதற்குமான வழிவகைகள் ;

(iv) எல்லா அம்சங்களிலும் கணனிகள் மற்றும் தகவல் தொழினுட்பக் கல்வியை அபிவிருத்தி செய்வதற்கான வழிவகைகள் ;

(v) கணனி மற்றும் தகவல் தொழினுட்பக் கைத்தொழிலில் தொழினுக்கமர்த்தப்பட்டுள்ள ஆட்களின் வினைத்திறமையையும் அறிவையும் பெருக்குவதற்கான வழிவகைகள் ;

(vi) கணனி மற்றும் தகவல் தொழினுட்ப அமைப்புகளில் தரவுகளின் செம்மையையும் அத்தகைய அமைப்புக்களில் ஆள்சார் தகவலை துஷ்பிரயோகஞ்செய்வதனையும் குறிப்பாகக் கருத்துட் கொண்டு கணனி மற்றும் தகவல் தொழினுட்பக் கைத்தொழிலில் உயர்தொழில் தராதரங்களைத் தாபிப்பதற்கான வழிவகைகள் ;

(vii) இலங்கையில் கணனி மற்றும் தகவல் தொழினுட்பக் கைத்தொழில் அபிவிருத்திக்கு அவசியமான ஆள்வலுத் தேவைப்பாடுகளை மதிப்பிடுவதற்கும் அத்தகைய ஆள் வலுவுக்குப் பயிற்சி அளிப்பதற்குமான வழிவகைகள் ; அத்துடன்

(viii) கணனி மற்றும் தகவல் தொழினுட்பச் சேவைகளை வெளிநாடுகளுக்கும் அளிப்பதனை ஊக்குவதற்கான வழிவகைகள் ;

(ஆ) கணனிகளினதும் தகவல் தொழினுட்பத்தினதும் எல்லா அம்சங்களிலும் ஆராய்ச்சியை ஊக்குவித்தலும் நடாத்தலும் ;

(இ) கணனிகள் மற்றும் தகவல் தொழினுட்பத்திலான அபிவிருத்திகளை அவதானித்தலும் இவ்வபிவிருத்திகளை இலங்கையில் பயன்படுத்துவதற்காக இசைவாக்கலும் ;

(ஈ) கணனிகள் மற்றும் தகவல் தொழினுட்பம் என்பன மீதும் அவற்றோடு உறவுபட்ட விடயங்கள் மீதும் தகவல் சேகரித்தலும் பரப்புதலும், அத்தகைய விடயங்களில் பொதுமக்களுக்கு கல்வி ஏற்பாடுசெய்தலும் ; அத்துடன்

(உ) பேரவையின் கடமைகளையும் பணிகளையும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் இலங்கையில் கணனிகள் மற்றும் தகவல் தொழினுட்பத்தை அபிவிருத்தி செய்வதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வேறு விடயங்களைச் செய்தல்.

பேரவையின் தத்துவங்கள்.

6. பேரவையானது பின்வருவனவற்றைச் செய்வதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும் :—

(அ) அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தை கொள்ளுதல், வைத்திருத்தல், அதனை விற்றல், குத்தகைக்குவிடல், ஈடுவைத்தல், கொடுத்துமாற்றல் அல்லது வேறுவகையாகக் கையுதிர்த்தல் ;

(ஆ) ஏதேனும் வங்கியில் அல்லது வங்கிகளில் நடைமுறை சேமிப்பு அல்லது வைப்புக் கணக்குகளைத் திறத்தலும் பேணலும் ;

(இ) அதன் தத்துவங்களை, கடமைகளை அல்லது பணிகளை பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் செய்துகொள்ளுதல் ;

(ஈ) அது தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய பிணைப்பொறுப்புக்களில் அதன் நிதிகளை முதலீடுசெய்தல் ;

(உ) ஆராய்ச்சி நோக்கங்களுக்காக நூலகங்களையும் ஆய்கூடங்களையும் கட்டியமைத்து, சாதனம் பொருத்திப் பேணுதல் ;

(ஊ) செயலகம் ஒன்றைத் தாபித்துப் பேணுதல் ;

(எ) கணனி மற்றும் தகவல் தொழினுட்பத்திலும் அவற்றேடு உறவுபட்ட விடயங்களிலும் அறிக்கைகளேயும் பருவ வெளியீடுகளேயும், பத்திரங்களேயும் சேகரித்து, அச்சிட்டு, வெளியிடுதல் ;

(ஏ) கணனி மற்றும் தகவல் தொழினுட்பத்திலும் அவற்றேடு உறவுபட்ட விடயங்களிலும் விரிவுரைகள், கருத்தரங்குகள் மற்றும் வேலேக்களங்கள் நடாத்துதல் ;

(ஐ) அதன் கடமைகளேயும் பணிகளேயும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அவசியமாகக்கூடியவாறுன அத்தகைய உரிமைகளேயும் சிறப்புரிமைகளேயும் தத்துவங்களேயும் உரிமங்களேயும் அதிகாரங்களேயும் கொள்ளுதல் ;

(ஒ) கணனிகள் மற்றும் தகவல் தொழினுட்பத்துடன் தொடர்புபட்ட குறிப்பான செயற்றிட்டங்களின் மீது ஆராய்ச்சியைத் தொடங்குவதற்கு அல்லது நடாத்துவதற்கு தனிப்பட்ட ஆட்களுக்கு, விஞ்ஞானிகளுக்கு அல்லது ஏதேனும் நிறுவகத்துக்கு அல்லது அதிகாரசபைக்கு மானியங்கள் வழங்குதல் ;

(ஓ) அமைச்சரின் அங்கீகாரத்துடன் பேரவையினது வேலேயின் எவ்வம்சத்திலேனும் பேரவைக்கு உதவி புரிவதற்கென தொழிற்பாட்டுக் குழுக்களேத் தாபித்தல், அத்தகைய குழுக்களின் வேலே மற்றும் அதிகார நோக்கெல்லேயினே வரையறுத்தல், அமைச்சரின் அங்கீகாரத்துடன் அத்தகைய குழுக்களுக்கு ஆட்களே நியமித்தல் ; அத்துடன்

(ஔ) இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக அதன் பணிகளே நிறைவேற்றுவதற்கும் கடமைகளேப் புரிவதற்கும் அவசியமாகக் கூடியவாறுன வேறு ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகித்தல்.

## பாகம் II

### பேரவையின் பணியாட்டொகுதி

பிரதான நிறைவேற்று அலுவலர்.

7. (1) தவிசாளர் பேரவையின் பிரதான நிறைவேற்று அலுவலராதல் வேண்டும்.

(2) தவிசாளர், பேரவையின் பொதுப் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைவாக, பேரவையின் அலுவல்களே நெறிப்படுத்துதல், பேரவையின் தத்துவங்களேயும் பணிகளேயும் கடமைகளேயும் ஒழுங்கமைத்து நிறைவேற்றுதல், பேரவையின் ஊழியர்களே நிருவகித்துக் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றுக்குப் பொறுப்புடையவராதல் வேண்டும்.

(3) தவிசாளர், பேரவையின் அங்கீகாரத்துடன், அவ்வாறு செய்வது அவசியமானதெனை அவர் கருதுகின்றபோதிலெல்லாம், இச்சட்டத்தின் மூலம் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள அல்லது அவர் மீது சுமத்தப்பட்டுள்ள அல்லது அவருக்கு குறித்தொதுக்கப் பட்டுள்ள தத்துவம், பணி அல்லது கடமை எதனையும் பேரவையின் எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவை யாளருக்கு எழுத்தில் கையளிக்கலாம்; அத்துடன் அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர், தவிசாளரின் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளுக்கமைவாக, அத்தகைய தத்துவத் தை, பணியை அல்லது கடமையை பிரயோகித்தல், நிறைவேற்று தல் அத்துடன் புரிதல் வேண்டும்.

பேரவையின் பணி யாட்டொகுதியின ரை நியமித்தல் முதலியன.

8. (1) பேரவையானது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமை வாக—

(அ) அதன் கடமைகளையும் பணிகளையும் புரிவதற்கும் நிறை வேற்றுவதற்கும் அவசியமெனை அது கருதும் அத்த கைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம் என்பதுடன் அத்தகைய அலு வலர்கள் அல்லது சேவையாளர்கள் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கலாம் அல்லது அவர்களை விலக்கலாம்;

(ஆ) அத்தகைய அலுவலர்களுக்கும் சேவையாளர் களுக்கும் வேதனமளிக்கப்பட வேண்டிய வீதங்களை நிர்ணயிக்கலாம் ;

(இ) அத்தகைய அலுவலர்களினதும் அல்லது சேவையாளர் களினதும் சேவை நியதி நிபந்தனைகளைத் தீர்மானிக் கலாம்; அத்துடன்

(ஈ) அத்தகைய அலுவலர்களினதும் அல்லது சேவை யாளர்களினதும் நலனுக்கென சகாய நிதியங்களை அல்லது திட்டங்களைத் தாபித்து ஒழுங்குபடுத்தலாம்; அத்துடன் ஏதேனும் அத்தகைய நிதியத்துக்கு அல்லது திட்டத் துக்கு உதவுதொகைகளை வழங்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட கருமங்கள் எல் லாம் தொடர்பிலும் அல்லது கருமங்களுள் எவையேனும் தொடர்பில் பேரவையினால் விதிகள் ஆக்கப்படலாம்.

பகிரங்க அலுவலர் களையும் பகிரங்கக் கூட்டுத்தாபனங் களினதும் உயர் கல்வி நிறுவனங் களினதும் அலு வலர்களையும் சேவையாளர் களையும் பேரவையின் பணி யாட்டொகுதிக்கு நியமித்தல்.

9. (1) பேரவையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவை யிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவல ரினதும் பொது நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப் பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத் துடன், அதே போன்ற சம்மதத்தோடு பேரவையால் தீர்மானிக் கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு பேரவையின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்தோடு அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் பேரவையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்பட்டவிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் பேரவையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்டவிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) குறிப்பிட்ட ஒரு காலப்பகுதிக்கு அரசாங்கத்துக்குச் சேவை புரிவதாக உடன்பட்டு அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டுள்ள எவரேனும் ஆளை பேரவையானது ஊழியத்தில் அமர்த்துமிடத்து அந்த ஆளினால் பேரவைக்குப் புரியப்படும் ஏதேனும் சேவைக்காலப்பகுதி, அத்தகைய ஒப்பந்தத்துக்கான கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்குப் புரியப்பட்ட சேவையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(5) பேரவையின் வேண்டுகோளின் பேரில், பகிரங்கக் கூட்டுத் தாபனமொன்றின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் அத்தகைய அலுவலரினதும் அல்லது சேவையாளரினதும் அத்தகைய கூட்டுத்தாபனத்தின் ஆளும் சபையினதும் சம்மதத்துடன் அதே சம்மதத்துடன் பேரவையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு பேரவையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது பேரவையினாலும் அத்தகைய கூட்டுத்தாபனத்தின் ஆளும் சபையினாலும் உடன்பட்டுக்கொள்ளக்கூடியவாறான ஓய்வூதிய அல்லது சகாய நிதி உரிமைகள் தொடர்பிலான நியதி, நிபந்தனைகள் உட்பட, அத்தகைய நியதி, நிபந்தனைகளின்மீது அத்தகைய பணியாட்டொகுதிக்கு அதே போன்ற சம்மதத்துடன் நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(6) எவரேனும் ஆள் (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றி பேரவையின் பணியாட்டொகுதிக்கு நியமிக்கப்பட்டவிடத்து, அத்தகைய ஆள் அத்தகைய பணியாட்டொகுதியின் வேறு எவரேனும் உறுப்பினரைப் போன்று அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

(7) பேரவையின் வேண்டுகோளின்பேரில், ஏதேனும் உயர் கல்வி நிறுவனத்தின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளரினதும் அந்த உயர்கல்வி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரினதும் சம்மதத்துடன், அதேபோன்ற சம்மதத்துடன் பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு பேரவையின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது பேரவையினாலும் அத்தகைய பிரதான நிறைவேற்று அலுவலரினாலும் உடன்பட்டுக்கொள்ளக்

கூடியவாறான ஓய்வூதிய, மற்றும் சகாயநிதி உரிமைகள் தொடர்பிலான நிபந்தனைகள் உட்பட அத்தகைய நிபந்தனைகளின்மீது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(8) ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்தின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் பேரவையின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்பட்டவிடத்து, அவர் அத்தகைய பணியாட்டொகுதியின் வேறு எவரேனும் உறுப்பினர் போன்று அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

(9) இப்பிரிவில், "உயர்கல்வி நிறுவனம்", "பிரதான நிறைவேற்று அலுவலர்" என்பன 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தில் முறையே அவ்வவற்றுக்கு குறித்தொதுக்கப்பட்ட பொருளை உடையனவாகும்.

## பாகம் III
## நிதி

10. (1) பேரவை அதன் சொந்த நிதியத்தை வைத்திருத்தல் வேண்டும். *பேரவையின் நிதியம்.*

(2) பேரவையின் நிதியத்துக்குள் பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) பேரவையின் பயன்பாட்டிற்காகப் பாராளுமன்றத்தினால் காலத்துக்குக் காலம் வாக்களிக்கப்படக்கூடியனவான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(ஆ) பேரவையினால் அதன் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகிப்பதிலும் நிறைவேற்றுவதிலும் புரிவதிலும் பெற்றுக்கொள்ளக்கூடிய அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(இ) எத்தன்மைத்தான எம்மூலத்திலிருந்தேனும் பேரவையினால் கடன்கள், நன்கொடைகள், கொடைகள் மற்றும் மானியங்கள் மூலம் பெற்றுக்கொள்ளப்படக்கூடிய அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(ஈ) 12 ஆம் பிரிவின்கீழ் அறவிடப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும்; அத்துடன்

(உ) இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டினால் நிதியத்துக்குட் செலுத்தப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(3) இச்சட்டத்தின் கீழ் பேரவையின் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகிப்பதிலும் நிறைவேற்றுவதிலும் புரிவதிலும் பேரவையினால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்படும் எல்லாப் பணத்தொகைகளும் அத்துடன் இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டினால் நிதியத்திலிருந்து செலுத்தப்படும்படி அதிகாரமளிக்கப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட வேறு ஏதேனும் செலவும் பேரவையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

பேரவையின் கடனெடுக்கும் தத்துவங்கள்.

11. பேரவையானது அமைச்சரின் சம்மதத்துடன் அல்லது அவரினால் கொடுக்கப்பட்ட ஏதேனும் பொது அதிகாரத்தின் நியதி, நிபந்தனைகளுக்கிணங்க, மேலதிகப்பற்றுவகையாக அல்லது வேறுவகையாக, இச்சட்டத்தின்கீழ் பேரவையின் கடப்பாடுகளைச் சமாளிப்பதற்கு அல்லது அதன் கடமைகளையும் பணிகளையும் புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு அதற்குத் தேவைப படக்கூடிய அத்தகைய பணத்தொகைகளை தற்காலிகமாக கடனெடுக்கலாம் :

ஆயின், இப்பிரிவின் கீழ் பேரவையினால் பெறப்பட்ட எவையேனும் தற்காலிகக்கடன்கள் தொடர்பில் வெளிநிலுவையாகவுள்ள தொகைகளின் கூட்டு மொத்தம் எந்நேரத்திலும் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஆலோசனையுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையை விஞ்சுதலாகாது.

கணனிகள் மற்றும் உறவுபட்ட உபகரணம் மீதான தீர்வை.

12. (1) இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படும் கணனி மற்றும் உறவுபட்ட உபகரணம் ஒவ்வொன்றின்மீதும் தீர்மானத்தின் மூலம் பாராளுமன்றத்தினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய வீதங்களிலான தீர்வையொன்று விதிக்கப்பட்டு, இறுக்கப்பட்டு, அறவிடப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவானது அது சுங்கக் கட்டளைச்சட்டத்தின் பாகமாக அமைந்தாற்போன்று ஏற்புடையதாதல் வேண்டும்; அத்துடன் அக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் அறவிடப்பட்ட கணனிகள் மற்றும் உறவுபட்ட உபகரணம் மீதான தீர்வை வரும்படிகள் பிரதான சுங்கச் சேகரிப்பாளரால் பேரவை நிதியத்தின் வரவுக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவினால் கணனிகள் மற்றும் உறவுபட்ட உபகரணம் என்பன மீது விதிக்கப்பட்ட தீர்வை எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் கணனிகள் மற்றும் உறவுபட்ட உபகரணம் என்பனமீது விதிக்கப்படும் ஏதேனும் இறக்குமதித்தீர்வைக்கு மேலதிகமானதாக இருத்தல் வேண்டும்.

பேரவையின் நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்.

13. (1) பேரவையின் நிதி ஆண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) பேரவையின் வருமானமும் செலவினமும், சொத்துக்களும், பொறுப்புக்களும் அத்துடன் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குப்புத்தகங்களைப் பேரவை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பாக அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் பேரவைக் கணக்குகளில் கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

வரிகளிலிருந்தும் தீர்வைகளிலிருந்தும் விலக்களித்தல்.

14. (1) பேரவையானது அதனால் இறக்குமதி செய்யப்படும் அல்லது கொள்வனவு செய்யப்படும் எவையேனும் பண்டங்கள் மீது ஏதேனும் சுங்கத் தீர்வை அல்லது மதுவரித்தீர்வை கொடுப்பதிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும். அமைச்சரானவர் அத்தகைய பண்டங்களின் இறக்குமதி அல்லது கொள்வனவு பேரவையின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் பணிகளைப்புரிவதற்கும் உகந்ததெனக் கருதுகின்றவிடத்து, அவர் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஆலோசனையுடன் அத்தகைய விலக்களிப்பை அங்கீகரித்தல்வேண்டும்.

(2) மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின்கீழ் விதிக்கப்படும் எவையேனும் வீதவரிகளைக் கொடுப்பனவு செய்வதிலிருந்து பேரவையானது விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் IV

## பொது

அமைச்சரின் பணிப்புகள்.

15. அமைச்சர் பேரவையுடனான ஆலோசனையின் பின்னர் பேரவையின் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகித்தல் பற்றியும் நிறைவேற்றுதல் பற்றியும் புரிதல் பற்றியுமான அத்தகைய பொதுவான அல்லது சிறப்பான பணிப்புரைகளை அவை கொள்கை பற்றிய விடயங்கள் தொடர்பிலானவையாக இருக்கின்ற மட்டில் எழுத்தில் காலத்துக்குக் காலம் பேரவைக்கு வழங்கலாம்; அத்துடன் பேரவையானது அத்தகைய பணிப்புரைகளுக்குப் பயன்கொடுத்தல் வேண்டும்.

தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் கையளித்தல்.

16. (1) பேரவை இச்சட்டத்தின்கீழான அதன் கடமைகளுள்ளும் பணிகளுள்ளும் எதனையாவது ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்கு, அபிவிருத்திச் சபைக்கு அல்லது உள்ளூர் அதிகார சபைக்கு எழுத்திலான கட்டளையொன்றின்மூலம் கையளிக்கலாம் :

ஆயின், பேரவையினால்—

(அ) ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனம் தொடர்பில், அத்தகைய பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் தவிர ;

(ஆ) ஏதேனும் அபிவிருத்திச் சபை தொடர்பில், அபிவிருத்திச் சபைகள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் தவிர; அத்துடன்

(இ) ஏதேனும் உள்ளூர் அதிகாரசபை தொடர்பில், உள்ளூராட்சி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் தவிர,

கட்டளையொன்று ஆக்கப்படுதல் ஆகாது.

(2) ஓராமுட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் கட்டளையொன்று எந்நேரத்திலும் பேரவையினால் நீக்கப்படலாம் அல்லது வேறுபடுத்தப்படலாம்.

பேரவையின் உறுப்பினர்களும் அலுவலர்களும் சேவையாளர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல்.

17. பேரவையின் எல்லா உறுப்பினர்களும் அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் பேரவையானது அட்டவணைப்படுத்தப் பட்ட நிறுவனமாகக் கருதப்படுதல்.

18. பேரவையானது இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

இரகசியத்தைப் பேணல் பற்றிய வெளிப்படுத்துகை.

19. பேரவையின் உறுப்பினர் ஒவ்வொருவரும் பேரவையின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும், தமது கடமைகளை ஏற்க முன்னர், சபையின் தொழிற்பாடு தொடர்பிலான எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் வன்மையான இரகசியத்தைக் கடைப்பிடிப்பதாக உறுதிப்படுத்தும் வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பம் இடுதல் வேண்டும் ; அத்துடன்—

(அ) நீதிமன்றமொன்றினால் அல்லது அக்கருமங்கள் தொடர்புபட்ட எவரேனும் ஆளினால் அல்லது ஆட்கள் குழுவினால் அவ்வாறு செய்யுமாறு தேவைப்படுத்தப்பட்டால் தவிர ; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுள் எதற்கும் இணங்கியொழுகுவதற்காகத் தவிர,

தமது கடமைகளைப் புரிகையில் தமது அறிவுக்கு எட்டக்கூடிய எக்கருமத்தையும் தாம் வெளிவிடமாட்டார் என அத்தகைய வெளிப்படுத்துகை மூலம் தம்மைக் கட்டுப்படுத்தல் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழ் அல்லது பேரவையினது பணிப்பின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கான பாதுகாப்பு.

20. (1) தொடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும்—

(அ) இச்சட்டத்தின் கீழ் பேரவையினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக, பேரவைக்கெதிராக ; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது பேரவையினது பணிப்பின்மீது எவரேனும் உறுப்பினரால், அலுவலரால், சேவையாளரால் அல்லது முகவரால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதே

னும் செயலுக்காக, பேரவையின் எவரேனும் உறுப்பினருக்கு, அலுவலருக்கு, சேவையாளருக்கு அல்லது முகவருக்கு எதிராக,

இருத்தலாகாது.

(2) பேரவையினால் அல்லது பேரவைக்கு எதிராக எதேனும் நீதிமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்பட்ட எதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் பேரவையினால் உறப்பட்ட எதேனும் செலவு பேரவையின் நிதிகளிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய எதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் பேரவைக்குச் செலுத்தப்பட்ட அல்லது பேரவையினால் அறவிடப்பட்ட எவையேனும் செலவு தொகைகள் பேரவையின் நிதியத்தில் வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(3) ஒராமுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்படுகின்றவரான அத்தகைய எவரேனும் ஆளினால் இச்சட்டத்தின் கீழ் அல்லது பேரவையின் பணிப்பின் மீது செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட எதேனும் செயல் தொடர்பில் எதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கெதிராகக் கொணரப்பட்ட எதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய ஆளினால் உறப்படும் செலவு எதுவும், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்ப்பளிப்பின், அத்தகைய செலவு, அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய ஆளினால் அறவிடப்பட்டாலன்றி, பேரவையின் நிதிகளிலிருந்து அவருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

பேரவை உறுப்பினர் ஒருவரின் உடலுக்கெதிராக அல்லது அவரது ஆதனத்துக்கெதிராக எழுத்தாணை எதுவும் வழங்கப்படலாகாது.

**21.** பேரவைக்கெதிராக கொணரப்பட்ட எதேனும் வழக்கு நடவடிக்கையில் பேரவையின் எவரேனும் உறுப்பினரின் உடலுக்கெதிராகவோ அல்லது அவரது ஆதனத்துக்கெதிராகவோ எழுத்தாணை எதுவும் வழங்கப்படலாகாது.

விதிகளை ஆக்குவதற்கு பேரவைக்குள்ள தத்துவங்கள்.

**22.** (1) இச்சட்டத்தினால் எக்கருமங்கள் தொடர்பாக விதிகள் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அல்லது தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அவ்வெல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அக்கருமங்கள் எது தொடர்பிலும் பேரவையானது விதிகளை ஆக்கலாம்.

(2) ஒராமுட்பிரிவின் கீழ் பேரவையினால் ஆக்கப்பட்ட விதி எதுவும் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு, அத்தகைய அங்கீகாரம் பற்றிய அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்படும்வரை பயனுடையதாதல் ஆகாது.

காணிகொள்ளுதற் சட்டத்தின் கீழ் அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல்.

**23.** (1) பேரவையின் எதேனும் குறித்த நோக்கத்துக்காக எதேனும் அசைவற்ற ஆதனம் கொள்ளப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டு கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அந்நோக்கத்துக்காக உத்தேச கொள்ளுதலை அமைச்சர் அங்கீகரிக்கின்றவிடத்து, அவ்வாதனம் பகிரங்க நோக்கமொன்றுக்குத் தேவைப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க காணிகொள்ளுதல் சட்டத்தின் கீழ் கொள்ளப்பட்டு பேரவைக்கு உரித்து மாற்றப்படுதலும் வேண்டும்.

(2) பேரவைக்காக காணி கொள்ளுதற் சட்டத்தின் கீழ் ஏதேனும் அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுவதற்கெனச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் பணத்தொகை பேரவையினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

அசைவுள்ள, அசைவற்ற அரச ஆதனத்தை பேரவைக்குக் கிடைக்கக்கூடிய தாகச் செய்தல்.

**24.** (1) அரசின் ஏதேனும் அசைவற்ற ஆதனம் பேரவையின் நோக்கத்துக்குத் தேவைப்படுகின்றவிடத்து, அத்தகைய நோக்கமானது முடிக்குரிய காணிகள் கட்டளைச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் அத்தகைய ஆதனத்தில் சிறப்பு மானியம் அல்லது குத்தகையொன்று செய்யப்படக்கூடிய நோக்கமொன்றாக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க அக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள் பேரவைக்கான அத்தகைய ஆதனத்தின் சிறப்பு மானியம் அல்லது குத்தகை ஒன்றுக்கு ஏற்புடையதாதலும் வேண்டும்.

(2) அரசின் ஏதேனும் அசைவுள்ள ஆதனம் பேரவையின் நோக்கத்துக்குத் தேவைப்படுகின்றவிடத்து, அமைச்சர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அத்தகைய அசைவுள்ள ஆதனத்தின் உடைமையையும் பயன்பாட்டையும் பேரவைக்குக் கைமாற்றலாம் அத்துடன் உரித்தாக்கலாம்.

விவரத்திரட்டுக்களும் தகவலும்.

**25.** (1) இச்சட்டத்தின் 5 ஆம், 6 ஆம் பிரிவுகளின் கீழ் பேரவையானது அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதனையும் புரிவதனையும் நிறைவேற்றுவதனையும் இயலச்செய்யும் நோக்கத்துக்காக, பேரவை அல்லது பேரவையினால் அதன் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள், எழுத்திலான அறிவித்தல் மூலம் அவ்வறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய காலப்பகுதிக்குள்ளாக,அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படவேண்டியவாறான அத்தகைய விவரத்திரட்டுக்கள், தகவல்கள் எல்லாவற்றையும் பேரவைக்கு அல்லது பேரவையினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்குக் கொடுத்துதவுமாறு எவரேனும் ஆளைத் தேவைப்படுத்தலாம்.

(2) ஓராமுட்பிரிவின் கீழான அறிவித்தல் ஒன்றன் மூலம் ஏதேனும் விவரத்திரட்டை அல்லது தகவலைக் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தப்பட்ட எவரேனும் ஆள் ஏதேனும் சட்டத்தினது ஏற்பாடுகளின் கீழ் அத்தகைய விவரத்திரட்டுகளை அல்லது தகவலை கொடுத்துதவுவதிலிருந்து தடுக்கப்பட்டால் தவிர, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்துக்குள்ளாக அத்தகைய தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுதல் அவரது கடமையாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அறிவித்தல் ஒன்றன் நியதிகளுக்கிணக்கமாக (1) ஆம் உட்பிரிவின்கீழ் கொடுத்துதவப்பட்ட விவரத்திரட்டில் அடங்கியுள்ள தகவல் எதுவும், அத்தகைய விவரத்திரட்டை அல்லது தகவலைத் கொடுத்துதவும் ஆளினது சம்மதத்துடன் தவிர அல்லது பேரவையினது பணிகளை நிறைவேற்றும் போது தவிர, பேரவையினால் வெளியிடப்படுதல் அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு அறிவிக்கப்படுதல் ஆகாது.

**26.** பேரவையானது ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் அவ்வாண்டின் போதான அதன் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றை வெளியிடுதல் வேண்டுமென்பதுடன் அங்கீகாரத்துக்கென அது அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும். அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டதும் அவ்வறிக்கை பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண்டும்.

பேரவை அதன் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல்.

**27.** பேரவையினால் அதன் சார்பில் பொதுவாக அல்லது சிறப்பாக அதிகாரமளிக்கப்பட்டுள்ள பேரவையின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், ஏதேனும் கணனி அல்லது தகவல் தொழினுட்ப நிறுவுகை எக்காணியில் அல்லது எவ்வளவுகளில் உள்ளதோ அக்காணி அல்லது வளவுகள் எதனதும் சொந்தக்காரருக்கு அல்லது இருப்பாட்சியாளருக்கு ஆகக்குறைந்தது மூன்று நாள் எழுத்திலான அறிவித்தல் கொடுத்ததன் பின்னர், அத்தகைய காணிக்குள் அல்லது வளவுக்குள் பிரவேசித்து பேரவையின் ஏதேனும் வேலையைக் கொண்டு நடாத்தும் நோக்கங்களுக்கு அல்லது பேரவையின் ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிப்பதில் அல்லது ஏதேனும் பணியைப் புரிவதில் முதனிலையான அல்லது இடைநேர்விளைவான ஏதேனும் புலனாய்வை அல்லது சோதனையைச் செய்யும் நோக்கங்களுக்கு நியாயமான அளவில் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய சோதனைகளையும் பார்வையிடல்களையும் கொண்டு நடாத்தலாம் என்பதுடன் அத்தகைய செயல்களையும் செய்யலாம்.

ஏதேனும் காணிக்குள் அல்லது வளவுகளுக்குள் நுழைவதற்கான தத்துவம்.

**28.** (1) (அ) இருபத்தைந்தாம் பிரிவின் கீழ் அவருக்கு அனுப்பப்பட்ட அறிவித்தலொன்றின் தேவைப்பாடுகளுக்கிணங்க அவரால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விவரத்திரட்டில் அல்லது தகவலில் வேண்டுமென்று ஏதேனும் பொய்யான அல்லது செம்மையற்ற கூற்றைச் செய்கின்ற;

தவறுகளும் தண்டங்களும்.

(ஆ) இருபத்தைந்தாம் பிரிவின்கீழ் அவருக்கு அனுப்பப்பட்ட ஏதேனும் அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது மறுக்கின்ற;

(இ) இருபத்தேழாம் பிரிவினால் எவரேனும் ஆளுக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களை அவ்வாள் பிரயோகிக்கையில் அவ்வாளை எதிர்க்கின்ற அல்லது தடுக்கின்ற ; அல்லது

(ஈ) பேரவையின் உறுப்பினர் அல்லது அலுவலர் அல்லது சேவையாளர் ஒருவராக இருந்துகொண்டு, இச்சட்டத்தின்கீழ் அவரது தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அல்லது அது தொடர்பாக அவரால் பெறப்பட்ட ஏதேனும் தகவலை, இச்சட்டத்தினால் அத்தகைய தகவலை வெளிவிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள நோக்கமொன்று தவிர்ந்த ஏதேனும் நோக்கத்துக்காக எவரேனும் ஆளுக்கு வெளிவிடுகின்ற,

ஒவ்வோராளும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் கீழ் தவறொன்றைப் புரிகின்ற ஒவ்வோராளும் நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐநூறு ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்துக்கு ஆளாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றினால் புரியப்பட்டவிடத்து, அப்போது,—

(அ) அவ்வாட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாயின், அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும், அலுவலரும்,

(ஆ) அவ்வாட்கள் குழு குழுமமொன்றாயின், அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளரும்,

அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் அல்லது அலுவலர் அல்லது அத்தகைய குழுமத்தின் பங்காளர் ஒருவர், அத்தகைய தவறானது அவரது அறிவு இல்லாமல் புரியப்பட்டதென அல்லது அத்தவறு புரியப்படுதலைத் தடுப்பதற்கு வேண்டிய அத்தகைய விழிப்பு எல்லாவற்றையும் பிரயோகித்தாரென எண்பிப்பாராயின், அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் ஆகாது.

பொருள்கோடல்.

29. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய—

"அபிவிருத்திச் சபை" என்பது 1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, அபிவிருத்திச் சபைகள் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட அபிவிருத்திச் சபை என்று பொருளாகும்;

"தகவல் தொழினுட்பம்" என்பது தரவையும் தகவலையும் சேகரிப்பதற்கும் கடத்துவதற்கும் வகைமுறைப்படுத்துவதற்குமான ஏதேனும் தொழினுட்பம் என்று பொருளாகும்.

### அட்டவணை

(பிரிவு 4 (3))

#### பேரவை உறுப்பினர்கள் தொடர்பிலான ஏற்பாடுகள்

1. ஆளொருவர்—

(அ) பாராளுமன்ற உறுப்பினராக, ஏதேனும் அபிவிருத்திச் சபை உறுப்பினராக அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபை உறுப்பினராக இருந்தால் அல்லது வந்தால் ; அல்லது

(ஆ) இலங்கைப் பிரசையொருவராக இல்லாதிருந்தால் அல்லது இருப்பதினின்று ஒழிந்தால் ; அல்லது

(இ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் நடைமுறையிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் சித்தசுவாதீனமற்றவரெனக் காணப்பட்டால் அல்லது வெளிப்படுத்தப்பட்டால் ; அல்லது

(ஈ) இலங்கையிலுள்ள அல்லது வேறு ஏதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பொன்றை அனுபவித் திருந்தால் அல்லது அனுபவித்துக் கொண்டிருந்தால்,

அவர் பேரவை உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருந்து வருவதற்குத் தகுதியற்றவராதல் வேண்டும்.

2. பேரவை உறுப்பினர் ஒவ்வொருவரும், இறப்பதன் மூலம், பதவி துறப்பதன் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் பதவியை வறிதாக்கினா லொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டுக் காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன் பதவியிலிருந்து அவர் அகற்றப்பட்டாலொழிய, மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும் :

ஆயின், இறப்பதன் மூலம், பதவி விலகுவதன் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் பதவியை வறிதாக்கிய உறுப்பினர் ஒருவரின் இடத்தில் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் அவர் எவ்வுறுப்பினருக்குப் பின் வருகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக் காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

3. சனாதிபதி, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அதற்கான காரணம் எதனையும் குறித்துரைக்காமல், பேரவை உறுப்பினர் எவரையும் பதவியிலிருந்து அகற்றலாம். இப்பந்தியின் கீழ் எவ்வுறுப்பினர் தொடர்பாக கட்டளையொன்று ஆக்கப் பட்டுள்ளதோ அவ்வுறுப்பினர் அக்கட்டளை கசெற்றில் வெளியிடப்பட்ட தேதியன்று பதவியை வறிதாக்கியவராகக் கருதப்படல் வேண்டும்.

4. பேரவையின் உறுப்பினர் ஒருவர் எந்நேரத்திலும் சனாதிபதிக்கு அப்பயன்பட முகவரியிடப்பட்ட கடித மூலம் தமது பதவியிலிருந்து விலகலாம்; அத்துடன் அத்தகைய விலகுதலானது சனாதிபதியினால் எழுத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் மேல் பயனுடையதாதல் வேண்டும்.

5. இறப்பதன் மூலம், பதவிவிலகுவதன் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப் படுவதன் மூலம் பேரவையின் எவரேனும் உறுப்பினரின் பதவி துறக்கப்படும் பட்சத்தில், சனாதிபதி, 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாட்டினைக் கருத்துட் கொண்டு, அத்தகைய உறுப்பினரின் இடத்துக்கு வேறு எவரேனும் ஆளை நியமிக்க லாம். அத்தகைய உறுப்பினரின் இடத்துக்கு அவ்வாறு நியமிக்கப்பட்ட எவரேனும் ஆள் அவர் எவ்வுறுப்பினர்க்குப் பின்வந்தாரோ அவ்வுறுப்பினரின் பதவிக் காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

6. பேரவையின் உறுப்பினர் ஒருவர் சுகவீனம் காரணமாக, இயலாமைகாரணமாக அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாத ஒரு காலப்பகுதிக்கு இலங்கையில் இல்லாமை காரணமாக தமது கடமைகளைத் தற்காலிகமாகப் புரியமுடியாதிருக்கின்ற விடத்து, அத்தகைய இயலாமை பற்றி சனாதிபதிக்கு அறிவித்தல் அத்தகைய உறுப்பின ரின் கடமையாதல் வேண்டும். அதன்மூலம், சனாதிபதி 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்துட் கொண்டு, அத்தகைய காலப்பகுதிக்கு அவரினிடத் தில் செயலாற்றுதற்கென வேறோராளை நியமிக்கலாம்.

7. பேரவை உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஆலோசனையுடன் அமைச்சர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஊதியம் பேரவையின் நிதியத்திலிருந்து கொடுக்கப்படலாம்.

8. (1) பேரவையின் தவிசாளர் சமுகமளித்திருந்தால் பேரவைக் கூட்டமொவ் வொன்றிலும் தலைமை தாங்குதல் வேண்டும். அத்தகைய கூட்டத்தில் தவிசாளரில் லாதபோது, சமுகமாயிருக்கும் உறுப்பினர்கள், சமுகமாயிருக்கும் உறுப்பினர்களுள் ஒருவரை, அத்தகைய கூட்டத்தில் தலைமைவகிக்கவெனத் தெரிவுசெய்தல் வேண்டும்.

(2) பேரவையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர் களாதல் வேண்டும்.

(3) பேரவையின் ஏதேனும் கூட்டத்தில் தலைமை தாங்குகின்ற ஆள் தமது சொந்த வாக்குடன் அறுதியிடும் வாக்கொன்றையும் உடையவராக இருத்தல் வேண்டும்.

(4) இப்பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, பேரவையானது அதன் கூட்டங்கள் தொடர்பிலும் அத்தகைய கூட்டத்தில் அலுவல் கொண்டுநடாத்துதல் தொடர்பிலும் அதன் நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்தலாம்.

9. பேரவையின் செயல், முடிவு அல்லது நடவடிக்கை எதுவும் அதன் எவரேனும் உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருக்கின்றதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதல் ஆகாது.

10. (1) பேரவையின் இலச்சினை பேரவையால் தீர்மானிக்கப்பட்டு வடிவமைக்கப் படலாம் ; அத்துடன் பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(2) பேரவையின் இலச்சினை காலத்துக்குக்காலம் பேரவை முடிவுசெய்யக்கூடியவாறான அத்தகைய ஆளினது கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(3) பேரவையின் இலச்சினை பேரவையின் அனுமதியுடனன்றியும் பேரவையின் இரு உறுப்பினர்களின் சமுகத்திலன்றியும் ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதல் ஆகாது ; அத்துடன் அவர்கள் அங்கிருந்ததற்கு அடையாளமாக அத்தகைய சாதனத்தில் அல்லது ஆவணத்தில் ஒப்பமிடுதல் வேண்டும்.

(4) பேரவையானது அதன் இலச்சினை பொறிக்கப்பட்ட சாதனங்களினதும் ஆவணங் களினதும் இடாப்பொன்றைப் பேணிவருதல் வேண்டும்.

11. (1) தவிசாளர் சுகவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக தமது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாகப் புரியமுடியாதுவிட்டால், அவரின் இடத்தில் செயற்படவென சனாதிபதி பேரவையின் வேறொரு உறுப்பினரை நியமிக்கலாம்.

(2) சனாதிபதி, அதற்கான காரணம் எதுவும் குறித்துரைக்காது தவிசாளரின் நியமனத்தை முடிவுறுத்தலாம்.

(3) தவிசாளர் எந்நேரத்திலும் சனாதிபதிக்கு முகவரியிட்ட கடிதமூலம் தவிசாளர் பதவியிலிருந்து விலகலாம். அத்தகைய பதவி விலகல் சனாதிபதியினால் எழுத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் பயனுடையதாதல் வேண்டும்.

(4) இரண்டாம், (3) ஆம் உட்பந்திகளின் ஏற்பாடுகளுக்கமைவாக, தவிசாளரின் பதவிக்காலப்பகுதி பேரவையில் அவர் உறுப்பினராக இருக்கும் காலப்பகுதியாதல் வேண்டும்.